தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

28.03.2013 A.M

## வளம் தரும் வைகாசிப் பட்ட நிலக்கடலைச் சாகுபடி



இறவைப் பயிராகவும், மானாவாரிப் பயிராகவும் நிலக்கடலையை வைகாசிப் பட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல மகசூலும், கூடுதல் லாபமும் கிடைக்கும் என்று வேளாண்மைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

பருவம் மற்றும் ரகங்கள்: வைகாசிப் பட்டமாக (மே-ஜூன்) இருந்தால் டிஎம்வி-7, கோ-2, 3, கோ (ஜிஎன்)-4, விஆர்ஐ, விஆர்ஐ 2, 3 மற்றும் டிஎம்வி (ஜிஎன்)-13 ஆகிய ரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

கார்த்திகைப் பட்டமாக (நவம்பர்-டிசம்பர்) இருந்தால் இறவைப் பயிராக மட்டும் வைகாசிப் பட்ட ரகங்களையே தேர்வு செய்து நடவு செய்யலாம்.

நிலம் தயாரிப்பு: மணற்பாங்கான வண்டல், செம்மண், கருவண்டல் நிலங்கள், நிலக்கடலைப் பயிருக்கு ஏற்றவை. மண்ணின் தன்மைக்கேற்ப 4 அல்லது 5 முறை இரும்புக் கலப்பை அல்லது நாட்டுக்கலப்பை கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழவு செய்ய வேண்டும். இறுதி உழவுக்கு முன் ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் அல்லது நான்கு டன் மக்கிய தென்னை நார்க்கழிவை இட வேண்டும்.

விதையளவு: மானாவாரிப் பயிருக்கு சிறிய பருப்பு 56 கிலோ, பெரிய பருப்பு 62.5 கிலோ தேவை. இறவைப் பயிருக்கு சிறிய பருப்பு 50 கிலோ, பெரிய பருப்பு 55 கிலோ போதுமானது.

விதை கடினப்படுத்துதல்: விதையளவை அதிகப்படுத்தி பணம் விரயம் செய்வதைவிட விதையைக் கடினப்படுத்துல் என்ற தொழில்நுட்பத்தின் மூலம், முளைக்காத விதைகளை தனியே அப்புறப்படுத்திவிட்டு விதைப்பதன் மூலம் வயலில் தேவையான செடிகளைப் பெறலாம். பண விரயத்தையும் தடுக்கலாம்.

வறட்சியைத் தாங்கி விதைகள் முளைத்து வளர வேண்டுமெனில் விதைகளை கால்சியம் குளோரைடு என்ற ரசாயனக் கரைசலில் ஊற வைத்து உலர்த்தி அதன் பின்னர் உபயோகிக்க வேண்டும்.

செய்முறை: ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் கால்சியம் குளோரைடு என்ற அளவில் 28 லிட்டர் தண்ணீரில் 140 கிராம் கால்சியம் குளோரைடு பயன்படுத்தி கரைசல் தயாரிக்க வேண்டும். இதில், ஒரு ஏக்கருக்குத் தேவையான 55 கிலோ விதையை 6 மணிநேரம் ஊற வைக்கவும். ஊற வைத்த விதைகளை ஈரச் சாக்கின் மீது பரப்பி அதை மற்றொரு ஈரச் சாக்கால் 24 மணி நேரம் வரை மூடி வைக்கவும். பின்னர், மேலே உள்ள சாக்கை நீக்கிவிட்டு சிறிதளவு முளைப்பு கண்ட விதைகளை தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர்த்தவும். இதேபோல, 2 அல்லது 3 முறை செய்து விதைகளை பிரித்தெடுத்து நிழலில் உலர்த்தி பின்னர் விதைப்பு செய்ய வேண்டும்.

பயன்கள்: கடினப்படுத்தப்பட்ட விதைகள் வறட்சியைத் தாங்கி வளரும். விதைகளில் தண்ணீர் ஊடுருவும் திறன் அதிகரிக்கும். இளம் பயிர்களில் பயிர் வீரியம் அதிகரிக்கும். முளைக்கும் தன்மை உள்ள விதைகள் கண்டறிந்து விதைப்பதால் பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

விதை நேர்த்தி: ரசாயன பூச்சிக் கொல்லி விதைநேர்த்தி செய்வதன் மூலம் கழுத்தழுகல், வேர் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் பெவிஸ்டின் அல்லது 4 கிராம் திரம் அல்லது 4 கிராம் மேன்கோசெப் என்ற அளவில் விதையுடன் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்னர் விதைக்க வேண்டும்.

உயிரியல் பூச்சிக் கொல்லி விதை நேர்த்தி செய்வதற்கு டிரைகோடெர்மா விரிடி என்ற பூசணம் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவிலும், சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம் என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

விதை நேர்த்தி செய்த விதைகளை விதைப்பதற்கு முன் நுண்ணுயிர் விதைநேர்த்தி செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்குத் தேவையான விதைக்கு நிலக்கடலை ரைசோபியம் மற்றும் பாஸ்போ

பாக்டீரியா தலா 2 பொட்டலங்களை அரிசிக் கஞ்சி 500 மி.லி உடன் கலந்து விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின்னர் விதைப்பு செய்ய வேண்டும்.

விதைப்பு: வரிசைக்கு வரிசை 30 செ.மீ., செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளியில் ஒரு சதுரமீட்டரில் 33 செடிகள் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்ம். விதை விதைக்கும் கருவியைப் பயன்படுத்தி விதைப்பு செய்வது சிறப்பாக இருக்கும்.

இல்லையெனில் களைகொத்து கொண்டு 30 செ.மீ. இடைவெளியில் குழி ஏற்படுத்தி குழிக்குள் விதையை விதைத்து பிறகு மண்ணால் மூட வேண்டும்.

அறுவடை: முதிர்ந்த இலைகள் காய்ந்து விடுதல், மேல்மட்ட இலைகள் மஞ்சள் வண்ணமாக இருந்தால் முதிர்ச்சியைக் குறிக்கும். அறுவடைக்கு முன்பு நீர் பாய்ச்ச வேண்டும். மண்ணில் போதுமான ஈரப்பதம் இருந்தால் நீர்ப்பாய்ச்சத் தேவையில்லை. பிடுங்கப்பட்ட செடிகளை குவியலாக வைக்கக் கூடாது.

ஈரமாக இருந்தால் கொத்து ரகங்கள் முளைக்க ஆரம்பித்துவிடும். செடிகளில் இருந்து காய்களைப் பிரிக்க நிலக்கடலை பிரிப்பானைப் பயன்படுத்தலாம்.

காய்களை 4 அல்லது 5 நாள்கள் வரை வெயிலில் உலர்த்த வேண்டும். இதேபோல், 2 நாள் இடைவெளி விட்டு 3 முறை உலர்த்த வேண்டும். வெப்பநிலை அதிகளவு இருக்கும்போது நேரடியாக உலர்த்தக் கூடாது.

காய்களைக் கோணிப் பைகளில் கட்டி மணற்பரப்பின் மீது சேகரித்து வைக்கலாம். இதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கும் என வேளாண்மைத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

## தென்னை சாகுபடிக்கு மண் மாதிரிச் சோதனை



தென்னை சாகுபடிக்கு முன்னர், மண் மாதிரி எடுத்து சோதனை செய்ய வேண்டும்.

இது தொடர்பாக நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் மு.சையது அகமது மிராஞ்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்னை மரத்திலிருந்து ஒரு மீட்டர் தொலைவில் 0-25 செ.மீ. ஆழத்திலும், 25-50 செ.மீ. ஆழத்திலும், 50-100 செ.மீ. ஆழத்திலும் மூன்று மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.

இவற்றை ஒன்றாகச் சேர்த்து சமப் பகிர்வு முறையில் ஒரு மண் மாதிரியை ஆய்வுக்கு தயார் செய்ய வேண்டும். ஆய்வுக்கு அனுப்பும் முன் இம் மாதிரியானது நிழலில் உலர்த்தப்பட்டு, அனுப்பப்பட வேண்டும். ஒரு ஹெக்டர் பரப்பிற்கு மூன்று முதல் 5 மண் மாதிரிகள் எடுக்கப்பட வேண்டும்.

மண் ஆய்வு செய்யாத இடங்களில் ஒரு ஆண்டுக்கான தழைமணி, சாம்பல் சத்துக்கள் பரிந்துரையில் கண்டவாறு கடைப்பிடிக்க வேண்டும். இதுவரை தென்னையைப் பொருத்தவரை நெட்டை ரகங்களுக்கும், நெட்டை, குட்டை ரகங்களுக்கும் பொதுவான பரிந்துரையே வழங்கப்பட்டது.

தற்போது நெட்டை ரகங்களுக்கு தனிப் பரிந்துரையும், நெட்டை, குட்டை ரகங்களுக்கு தனி பரிந்துரையும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இயற்கைச் சூழலைப் பாதிக்காமல் தொடர்ச்சியாக சீரான விளைச்சலைப் பெற இயற்கை உரங்களை இடுவது மிக முக்கியம். தொடர்ந்து ரசாயன உரங்களை உபயோகிப்பதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதோடு உற்பத்திச் செலவும் அதிகரிக்கிறது.

தற்காலச் சூழ்நிலையில், விவசாயத்தில் கிடைக்கக் கூடிய கழிவுப் பொருள்களை சரியான முறையில் இயற்கை உரங்களாக மாற்றிப் பயன்படுத்துவது அவசியம்.

தென்னைக்கு உயிர் உரமான அசோட்டோபாக்டர் அல்லது பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர்களை 200 கிராம் என்ற அளவில் 10 கிலோ மக்கிய சாணி எருவுடன் கலந்து இடுவதால் வேர்களில் உற்பத்தி மற்றும் மகசூல் அதிகரிக்கிறது.

தென்னந்தோப்பில் ஏக்கருக்கு 12-15 கிலோ சணப்பை விதைப்பு செய்து 45 நாள்களில் மடக்கி உழவு செய்யலாம். தண்ணீர் குறைவு உள்ள தோப்புகளில் தென்னையைச் சுற்றி 2 மீ. ஆரவட்டப் பாத்திக்கு சுமார் 50 கிராம் சணப்பு விதை விதைத்து அவை வளர்ந்து பூக்கும் முன் மடக்கி கொத்தி விடலாம்.

ஆண்டுக்கு மூன்று முறை இவ்வாறு செய்தால் போதுமான தழைச்சத்து கிடைக்கும்.

தென்னை நார்க்கழிவை மக்க வைத்து, மக்கிய எருவுக்குப் பதிலாக தென்னைக்கு இடலாம். மக்கிய தென்னை நார்க்கழிவு உரம் 50 கிலோ இடுவதன் மூலம் நீர்ப்பிடிப்புத் தன்மை அதிகரிக்கும். காற்றோட்டம் பெருகி வேர்கள் சுவாசிக்க உதவும்.

இறுகலான மண் பொலபொலப்பு தன்மை அடையும். மொத்தத்தில் மண்ணின் பெளதீகக் குணங்கள் மேம்படும்.

மக்க வைக்கப்பட்ட தென்னை நார்க்கழிவுவில் உள்ள தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்தின் அளவு தொழு உரத்தை விட இரு மடங்கு உயர்கிறது. மேலும் பயிருக்குத் தேவையான நுண்ணுட்டச் சத்துகளின் அளவும் அதிகரிக்கும்.

நன்கு பரமாரிக்கப்பட்ட ஒரு ஹெக்டர் தென்னந் தோப்பிலிருந்து கிடைக்கும் காய்ந்த ஓலைகளில் இருந்து நான்கு டன் மண்புழு கம்போஸ்ட் உரத்தை தயாரித்து மரங்களுக்கு இடலாம். தென்னை இலைகளில் லிக்னின், செல்லுலோஸ் போன்ற ரசாயனப் பொருள்கள் அதிக அளவில் உள்ளதால் ஓலைகள் இயற்கையாக மக்குவதற்கு அதிக நாள்கள் ஆவதோடு தரம் குறைந்த கம்போஸ் உரம்தான் கிடைக்கும்.

யுடிரல்லஸ் என்ற ஒரு வகை மண் புழுக்கள் காய்ந்த தென்னை ஓலைகளை வேகமாக மக்கச் செய்வதோடு தரம் வாய்ந்த கம்போஸ்ட் உரத்தை உருவாக்கும் திறன் கொண்டது. தென்னந்தோப்புகளில் ஊடுபயிர்களாக கிழங்கு, பழம், மஞ்சள், இஞ்சி மறறும் தானியப் பயிர்கள், பயறு வகைப் பயிர்கள் மற்றும் காய்கனிப் பயிர்களை பயிரிடலாம்.

ஓரளவுக்கு நிழல் விழும் தென்னந்தோப்புகளில் அன்னாசிப் பயிர் நன்றாக பயிராகிறது.

வாழைப் பயிர்களும் ஊடுபயிருக்கு ஏற்றது. மேலும் முல்லை வகைகள், செவ்வந்தி, கனகாம்பரம், சம்பங்கி ஹெலிகோனியா, ஆர்கிட், சைனா ஆஸ்டர், மருகு, ஆந்தூரியம் மற்றும் அலங்கார செடிகள் போன்றவற்றையும் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம் என்றார் அவர்.

### சோழவந்தான் பகுதியில் வாழை மரங்கள் சேதம்

மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியில் மழை, காற்றுக்கு வாழை மரங்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சோழவந்தான் பகுதியில் உள்ள ஆண்டியமேடு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த 2 நாள்களுக்கு முன் பெய்த பலத்த மழை மற்றும் சூறாவளிக் காற்றால் வாழை மரங்கள் சாய்ந்தன. இதனால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

### பால் உற்பத்தியாளர் கவனத்துக்கு...

பால் உற்பத்தியாளர்களிடம் செலவினமாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையை, உற்பத்தியாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்தி: மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் (ஆவின்), மதுரை மற்றும் தேனி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு 1.75 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பாலின் தரத்துக்கு ஏற்ப லிட்டருக்கு 60 பைசா வரை செலவினமாகப் பிடித்தம் செய்யப்பட்டது.
இத் தொகையை சங்க உறுப்பினர்களுக்கு வழங்க, பால் உற்பத்தி ஆணையர் அனுமதி அளித்துள்ளார். இதன்படி நடப்பு ஆண்டில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரலில் சங்கத்திற்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு இத் தொகை வழங்கப்படும். பிப்ரவரியில் மட்டும் மதுரை, தேனி பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கூடுதல் விலையாக ரூ. 24.54 லட்சம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

### பால் உற்பத்தியாளர்களுக்கு பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் தொகையை வழங்க உத்தரவு

பால் உற்பத்தியாளர்களிடம் செலவினமாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையை, உற்பத்தியாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் (ஆவின்), மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு 1.75 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. உறுப்பினர்கள் வழங்கும் பாலின் தரத்துக்கு ஏற்ப லிட்டருக்கு 60 பைசா வரை செலவினமாகப் பிடித்தம் செய்யப்பட்டது.
இத் தொகையை சங்க உறுப்பினர்களுக்கு வழங்க, பால் உற்பத்தி ஆணையர் அனுமதி அளித்துள்ளார். இதன்படி நடப்பு ஆண்டில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் சங்கத்திற்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு இத் தொகை வழங்கப்படும். பிப்ரவரி மாதத்திற்கு மட்டும் மதுரை, தேனி மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கூடுதல் விலையாக ரூ. 24.54 லட்சம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.03.2013 A.M**

## பயிர் நிவாரண உதவி விவசாயிகள் கோரிக்கை

தஞ்சாவூர்: "தஞ்சையில், மழையின்றி பயிர் நஷ்டம் ஏற்பட்டும் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை' எனக்கூறி, விவசாயிகள் கலெக்டரிடம் புகார் மனு கொடுத்தனர். தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுக்கா, ஆவாரம்பட்டி பஞ்., மற்றும் தொண்டராயன்பாடி பஞ்., விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர், தமிழக விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டத்தலைவர் காமராஜ், விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி, ராயமுண்டான்பட்டி ஜீவக்குமார் ஆகியோர், தஞ்சை கலெக்டர் அலுவலகத்துக்கு நேற்று வந்தனர். பின்னர் கலெக்டரிடம் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது: தொண்டராயன்பாடி பகுதியில், கடந்த சம்பா நெற்பயிரை நேரடி நெல் விதைப்பு செய்தோம். இப்பகுதியிலுள்ள விச்சலூர் படுகை, பாலாயிவயல் பகுதி மக்கள் 250க்கும் மேற்பட்டோர் 310 ஏக்கரில் பயிர் செய்திருந்தோம். ஆனால், காவிரி நீரின்றி, மழைநீரின்றி பயிர்கள் வாடி கருகி விட்டன. இந்நிலையில், இழப்பீடு பட்டியலில் பெயரை சேர்க்கவில்லை. இதனால், அரசு நிவாரணம் கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே பட்டியலில் சேர்த்து, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு, அதில், கூறியுள்ளனர்.

## கேரளாவில் மவுசு இருந்தாலும் விலை குறையும் வெல்லம்

போடி:போடி, முந்தல், கோடாங்கிபட்டி, பெரியகுளம், லெட்சுமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் கரும்பு அதிகளவில் பயிரிடப்படுகிறது. அறுவடை செய்யப்படும் கரும்பை பல விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பி விடுவர். பல விவசாயிகள் தாங்களாகவே கரும்பை ஆட்டி உருண்டை வெல்லம் தயாரிக்கின்றனர். தேனி மாவடட்ட உருண்டை வெல்லத்திற்கு கேரளாவில் எப்போது "மவுசு' அதிகம். தற்போது, கேரளாவில் சித்திரை விசு திருவிழா கொண்டாட உள்ள நிலையில் உருண்டை வெல்லத்திற்கு, எப்போதுமே கடும் கிராக்கி இருக்கும். 42 கிலோ கொண்ட உருண்டை வெல்லம், கடந்த வாரம் 1650 ரூபாயாக இருந்தது. தற்போது சித்தூர், மாண்டியா

உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து வரும் உருண்டை வெல்லத்தால், கடந்த வாரத்தை விட, 100 ரூபாய் விலை குறைந்து 1550 ஆக உள்ளது. வெளி மாநிலங்களிலில் இருந்து இறக்குமதியாகும் வெல்லத்தால், விலை குறைந்து வருவதால் விவசாயிகள் பெரிதும் கலக்கம் அடைந்துள்ளனர்.

## அறுவடை செய்த விளை பொருட்களை காலம் தாழ்த்தி விற்பனை செய்தால் நல்ல பயன்

தூத்துக்குடி: விளை பொருட்களை அறுவடை செய்த பின் உடனே விற்பனை செய்யாமல் காலம் தாழ்த்தி விற்பனை செய்தால் நல்ல லாபத்தை பெறலாம். இதற்காக வே ளாண் வணிகத்துறை விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகளை செய்ய தயாராக இருப்பதாக உணவு பதப்படுத்துதல் பயிற்சியில் வேளாண்மை அதிகாரி ராஜா தெரிவித்தார்.

தூத்துக்குடி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் தூத்துக்குடி வட்டார விளைபொருள் உற்பத்தியாளர்குழு விவசாயிகளுக்கு விளை பொருளை உணவு பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொழில் நுட்ப பயிற்சி வாகைக்குளம் ஸ்காட் வேளாண்மை அறிவியல் மையத்தில் நடந்தது. வேளாண் வணிகத்துறை வேளாண்மை அதிகாரி ராஜா வரவேற்றார். அப்போது அவர் பேசுகையில், விவசாயிகள் குழுக்களாக இணைந்து விளை பொருட்களை அறுவடை செய்த பின்னர், உடனடியாக அதனை விற்பனை செய்யாமல் காலம் தாழ்த்தி விற்பனை செய்தும், விளைபொருள் விலை நிலவரத்தை விரைவில் தமிழில் தங்களது செல்போன் மூலம் திருச்சியில் உள்ள வேளாண் வணிகத்துறை மையத்தில் இருந்து பெற்று பயனடையலாம் என்றார். வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் மாரிமுத்து பேசுகையில், உணவு பதப்படுத்துதல் திட்டத்தின் மூலம் அரிசி ஆலை, எண்ணெய் நிறுவனம் மற்றும் உணவு பதப்படுத்தும் நிறுவனம் அமைத்தால் இந்த திட்டம் மூலம் 25 சதவீதம் மானியம் அதிகப்பட்சமாக 50 லட்ச ரூபாய் வரை மானியம் பெறலாம். மீன், பால் மற்றும் இறைச்சியை பதப்படுத்தி குளிர்பதன கிட்டங்கி அமைக்க உணவு பதப்படுத்தும் திட்டத்தின் மூலம் 50 சதவீதம் மானியம், அதிகப்பட்சமாக 10 கோடி ரூபாய் வரை மானியம் பெறலாம் என்றார். தூத்துக்குடி வேளாண்மை உதவி இயக்குனர் பூவண்ணன் வேளாண்மைத்துறை திட்டங்கள் மற்றும் அட்மா திட்டங்கள் பற்றி பேசினார். கால்நடை வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் முறைகள் குறித்து ஸ்காட் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பேசினார். அறுவடை செய்த பின்னர் நேர்த்தி உள்ளிட்ட விபரங்கள் குறித்து தொழில் நுட்ப வல்லுநர்கள் அசோக்குமார், வெங்கடேஷ், முருகன், சுமதி ஆகியோர் பேசினர். விளை பொருட்களின் விலை முன்னறிவிப்பு குறித்து வேளாண்மை

அலுவலர் மணிகண்டன் விளக்கினார். விளைபொருள் உற்பத்தியாளர் குழுவினர் அதிகமாக பங்கேற்றனர். உதவி வேளா ண்மை அலுவலர் சுரேஷ் நன்றி கூறினார்.

## இயற்கை விவசாயம் குறித்து தொட்டியத்தில் கருத்தரங்கம்

தொட்டியம்: விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கம், தொட்டியம் திருமண மண்டபத்தில் நடந்தது.

தொட்டியம் ஆண்டவன் கலைக்கல்லூரி மற்றும் டி.சி.சி.பி., அறக்கட்டளை சார்பில் நடந்த கருத்தரங்கத்துக்கு, தொட்டியம் வெற்றிலை வியாபாரிகள் சங்க தலைவர் தியாகராஜன் தலைமை வகித்தார். வாழை உற்பத்தியாளர் சங்க தலைவர் சுகுமார், வாழை உற்பத்தியாளர்கள் சங்க துணைத்தலைவர் மருதைப்பிள்ளை, டாக்டர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி நுண்ணுயிரியல் துறைத்தலைவர் சாந்தி பங்கேற்று அசோலா வளர்ப்பு நுண்ணுயிர் உரம் தயாரித்தல் குறித்து விளக்கி பேசினர். துறை பேராசிரியர்கள் ராஜபாண்டியன், வித்யா, சுமித்ரா ஆகியோர் மூலிகை பூச்சி குறித்து பேசினர். கருத்தரங்கில், வாழை விவசாயிகள் கிருஷ்ணன், மோகன், தயாளன், மாஜி அறங்காவலர் குழு தலைவர் பழனிசாமி உட்பட, அப்பகுதி விவசாயிகள் திரளாக பங்கேற்றனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை டி.சி.சி.பி., அறக்கட்டளை நிறுவனர் ராதாகிருஷ்ணன் செய்திருந்தார்.

## கல்யாணபூசணி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்: திண்டிவனம் பகுதியில் அமோக விளைச்சல்

திண்டிவனம்: திண்டிவனம் பகுதியில் கல்யாண பூசணிக்காய் பயிர் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். திண்டிவனம் அடுத்த நல்லம்பாக்கம், நகர், வடநெற்குணம் உள்ளிட்ட பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் தர்பூசணி அதிகளவில் பயிரிடப்பட்டு வந்தது. தர்பூசணி அறுவடை செய்யும் நேரத்தில் மழை குறுக்கிட்டதால் விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இதனை தொடர்ந்து, அப்பகுதி விவசாயிகள் கல்யாண பூசணிக்காய் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டிவருகின்றனர். அமாவாசை, வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் வரும் ராகு காலங்களில் கோவில்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வாகனங்களுக்கு சுற்றிப்போடுவதற்கு கல்யாணபூசணிகள் பயன்படுத்தி வருவதால் தேவை அதிகரித்துள்ளது. இதனால், திண்டிவனம் பகுதி விவசாயிகள் கல்யாணபூசணிக்காய் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கல்யாணபூசணிக்காய் பயிரிடுவதற்கு உரம், பூச்சிக்கொல்லி மருந்து, தண்ணீர் அதிகளவில் தேவைப்படுவதில்லை. இதனால் பயிரிடுவதற்கான செலவு குறைவாக உள்ளது.

கோடைக்காலங்களில் கிணற்று பாசனத்தில் கிடைக்கும் குறைந்தளவு நீரால் வேறு எந்த விதமான பயிர்களும் செய்யமுடியாத நிலையில், குறைந்தளவு பாசனத்தில் பயன்தரும் கல்யாணபூசணி பயிர் செய்வது விவசாயிகளுக்கு லாபகரமாக அமைந்துள்ளது. விளைந்த கல்யாண பூசணிக்காய்களை விவசாயிகள் சென்னையில் உள்ள கோயம்பேடு மார்க் கெட்டிற்கு அனுப்பி வந்தனர். அங்கு பூசணிக்காய்க்கு நல்ல வரவேற்புள்ளதால், வியாபாரிகள் விவசாய நிலத்திற்கே வந்து தங்களது வாகனங்களில் தற்போது ஏற்றிச் செல்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவும் மிச்சமாகியுள்ளது. பல விதத்தில் லாபம் தரும் கல்யாண பூசணிக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

## பருவ மழை பொய்த்துப் போனதால் 700 ஹெக்டேர் கரும்பு கருகியது

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், பருவ மழை பொய்த்துபோனதால், 700 ஹெக்டேர் கரும்பு பயிர், காய்ந்து, கருகி வருகிறது. அதனால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

ஆத்தூர், கெங்கவல்லி தாலுகாவில், ஆத்தூர், நரசிங்கபுரம், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், கருமந்துறை, தலைவாசல், காட்டுக்கோட்டை, மஞ்சினி, வீரகனூர், மணிவிழுந்தான், சிறுவாச்சூர், கெங்கவல்லி, தம்மம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில், பருவ மழை பெய்த்துபோனதால், ஆறு, நீரோடை, விவசாய கிணறு உள்ளிட்ட நீர் நிலைகளில், தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதில், விவசாய கிணறுகளில், நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு, தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது.

தற்போது, நான்கு முதல் ஆறு மாதம் வரையுள்ள கறும்பு மற்றும் அறுவடை செய்யுள் நிலையில் உள்ள கரும்புகளும், தண்ணீர் இல்லாமல் காய்ந்து, கருகுவதால், விவசாயிகள், வேதனையடைந்துள்ளனர். ஆத்தூர் பகுதியில் மட்டும், 700 ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிர்கள், தண்ணீர் இல்லாமல், காய்ந்து வருகிறது.

இதனிடையே, கூட்டுறவு ஆலைக்கு பதிவு செய்த கரும்புகளை, உரிய காலத்தில் அறுவடை செய்யாததால், எடை மற்றும் பிழிதிறன் குறைந்து வருகிறது. பருவ மழை பாதிப்பு ஒருபுறமும், கூட்டுறவு ஆலைகளின் அலட்சியம் காரணமாக, கரும்பு விவசாயிகள் செய்வதறியாமல் பரிதவித்து வருகின்றனர்.

ஆத்தூரை சேர்ந்த, ஐக்கிய விவசாயிகள் சங்க செயலாளர் ராஜா கூறியதாவது:

ஆத்தூர், கெங்கவல்லி தாலுகா பகுதியில், சாகுபடி செய்யும் கரும்புகள், மோகனூர், பெரம்பலூர் கூட்டுறவு ஆலைகள் மற்றும் தனியார் ஆலைகளுக்கு, அனுப்பி வைக்கப்படுகிறது. அதில், ஒரு ஏக்கர் கரும்பு சாகுபடி செய்தால், 50 முதல், 60 டன் வரை, மகசூல் இருக்கும்.

பருவ மழை பாதிப்பால், ஆத்தூர் பகுதியில், 1,500 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்துள்ள கரும்பு பயிர்கள், தண்ணீர் இல்லாமல் காய்ந்து வருகிறது. அதனால், ஏக்கருக்கு, 30 ஆயிரம் ரூபாய் வீதம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கரும்பு நடவு செய்து, ஒன்பது அல்லது பத்து மாதத்தில், அறுவடை செய்ய வேண்டும்.

வடசென்னிமலை, சார்வாய் புதூர் பகுதியில், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்த கரும்புகளுக்கு, 16 மாதங்களாகியும், வெட்டு ஆர்டர் வழங்கவில்லை.

அதனால், ஏக்கருக்கு, 30 டன் வரை, எடை மற்றும் பிழிதிறன் குறையும் சூழலும், அறுவடை செய்யாத கரும்புகளில், செடிகள் வளர்ந்தும் காணப்படுகிறது. அதனால், விவசாயிகள் செய்வதறியாமல் உள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆர்வம் இயற்கை விவசாயத்துக்கு மாற விவசாயிகள்... 30 ஆயிரம் ஏக்கர் சான்று பெற்று சாகுபடி

பனமரத்துப்பட்டி: ""தமிழகத்தில், 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தில், இயற்கை வேளாண் சான்று பெற்று, விவசாயம் செய்யப்படுகிறது. இயற்கை விவசாயத்துக்கு திரும்பும் விவசாயிகளை போற்றி வணங்க வேண்டும்,'' என, சந்தியூரில் நடந்த அங்கக வேளாண் கருதரங்கில், இயற்கை வேளாண் துறை தலைவர் ராமசாமி பேசினார்.

சேலம், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், இயற்கை வேளாண்மை சான்று மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம் நடந்தது. உதவி பேராசிரியர் ஸ்ரீராம் வரவேற்றார். திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் இயற்கை விவசாயம் குறித்து, விளக்கிப் பேசினார்.

இயற்கை வேளாண் சான்றிதழ் துறை தலைவர் பழனிகுமார், ஆய்வாளர் சீனிவாசன் ஆகியோர் பேசியதாவது:

விவசாயிகள், இயற்கை விவசாயத்துக்கு சான்று, விற்பனை செய்தால், கூடுதல் லாபம் பெறலாம். இயற்கை விவசாயம் செய்ய, ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தக் கூடாது, களைக்கொல்லி மருந்து தெளிக்கக் கூடாது, பூஞ்சானம் அடிக்கக் கூடாது, மரபணு மாற்றம் செய்யப்பட்ட விலைகளை பயன்படுத்தக் கூடாது.

தமிழகத்தில், இயற்கை விவசாயத்துக்கு சான்று அளிக்க, தனித்துறை செயல்படுகிறது. இயற்கை விவசாயத்துக்கு, 2,200 ரூபாய் செலுத்தி, சான்று பெறவேண்டும். இதில், ஆண்டுதோறும், 25

சதவீத கட்டணம் செலுத்தி, புதுப்பிக்க வேண்டும்.
முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுக்கு வாய்ப்பு சான்று வழங்கப்படும். மூன்றாம் ஆண்டு, இயற்கை வேளாண் சாகுபடி சான்று வழங்கப்படும். 500 ரூபாய் செலுத்தி, வணிகச் சான்று பெற்று, ஏற்றுமதி செய்யலாம்.
தமிழகத்தில், 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், இயற்கை வேளாண் சான்று பெற்றுள்ளனர். இதில், சேலம் மாவட்டத்தில், 7,000 ஏக்கரில், சான்று பெற்று, இயற்கை முறையில், விவசாயிகள், விவசாயம் செய்து வருகின்றனர். இயற்கை விவசாயம் செய்ய, விவசாயிகள் மத்தியில், ஆர்வம் அதிகரித்துள்ளது.
இவ்வாறு அவர்கள் பேசினர்.
வேளாண் பல்கலைக்கழக இயற்கை வேளாண் துறை தலைவர் ராமசாமி பேசியதாவது:
இயற்கை விவசாயத்துக்கு தேவையான இடுபொருட்கள், மருந்துகளை, நாமே தயார் செய்து கொள்ளலாம். இயற்கை விவசாயம் செய்ய, ஆடு, மாடு, கோழி வளர்ப்பு அவசியம்.
ஆறாயிரம் பேர் உள்ள கிராமத்தில், ஆறு பேர்கூட வயலில் இறங்கி வேலை செய்யவதில்லை. விவசாயிகள், சமுதாயத்தை காப்பவர்கள், இயற்கை விவசாய சாகுபடி செய்ய, நிறைய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். அங்கக சாகுபடிக்கு ஆதாரமே, இயற்கை வேளாண் சான்று பெறுவதே. இயற்கை விவசாயத்திற்கு திரும்பும் விவசாயிகளை, போற்றி வணங்க வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார்.
அங்கக வேளாண் தொழில்நுட்பம் குறித்து ஆனந்தராசு, சந்தைப்படுத்துதல் பற்றி பயோஜென் இயக்குனர் சுமதி ஆகியோர் பேசினர். சந்தியூர் வேளாண் விஞ்ஞானிகள் ஜெகதாம்பாள், சித்ரா, கீதா முன்னோடி விவசாயி செல்வராஜ் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பாக்கு சாகுபடியில் ஒரு சாதனை கொள்முதல் மையம் அமைக்க கோரிக்கை

தமிழக அளவில், ஆத்தூர் பகுதியில், அதிகளவில் பாக்கு சாகுபடி செய்யப்படுகிறது.
தமிழகத்தில், 5,456 ஹெக்டேர் பரப்பளவில், மலைப் பயிரான பாக்கு பயிரிடப்பட்டு, பத்தாயிரத்து, 436 மெட்ரிக் டன் பாக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், சேலம் மற்றும் கோவை மாவட்டங்களில், 30 சதவீதமும், 15 மாவட்டங்களில், 70 சதவீதம் அளவில், பாக்கு சாகுபடி செய்யப்படுகிறது.
சேலம் மாவட்டம், ஆத்தூர், நரசிங்கபுரம், பெத்தநாயக்கன்பாளையம், கருமந்துறை, பாப்பநாயக்கன்பட்டி, ஏத்தாப்பூர், தும்பல், கெங்கவல்லி, வாழப்பாடி பகுதிகளில், 3,940 ஏக்கர் நிலங்களில், பாக்கு பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.
இங்கு, உற்பத்தி செய்து, பதப்படுத்தும் பாக்குகளை, சேலம் செவ்வாய்பேட்டை சந்தை மூலமாக, கும்பகோணம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும், கோவையில் உற்பத்தி செய்யும்

பாக்குகளை, மேட்டுப்பாளையம் சந்தை மூலமாக, இதர மாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

ஆத்தூர் பகுதியில், விளையும் பாக்குகள், ஆண்டு தோறும், ஐந்து கோடி ரூபாய் வரை, கொள்முதல் செய்வதால், 30 ஆயிரம் கூலித் தொழிலாளர்களுக்கு, வேலை கிடைக்கிறது. தமிழகம் மட்டுமின்றி மும்பை, குஜராத், மகாராஷ்டிரா மற்றும் பாகிஸ்தானுக்கு, இடைத் தரர்கள் மூலம் பாக்குகளை, விவசாயிகள் கொள்முதல் செய்வதால், 30 சதவீதம் வரை, விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

ஆத்தூரில் பாக்கு கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என, பாக்கு விவசாயிகள், பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், பாக்கு கொள்முதல் மையம் அமைப்பதற்கு, நடவடிக்கை எடுக்கவில்லை.

இதுகுறித்து, பாக்கு விவசாயிகள் கூறியதாவது:

பாக்கு விலை கணிசமான அளவில் இருப்பதால், ஒரு ஹெக்டேருக்கு, கொட்டை பாக்கு, 2.50 லட்சம் ரூபாய் வரையும், சுத்தம் செய்து, வெட்டி வைத்த பாக்குகளை, 5.50 லட்சம் ரூபாய் வரை, வருவாய் கிடைக்கிறது. ஆண்டு தோறும், தமிழக அரசு பல்வேறு விளை பயிர்களுக்கு மட்டுமே வேளாண் செலவுகள் மற்றும் விலை குறித்த குழுவுடன் ஆதார விலையை நிர்ணயம் செய்யுமாறு, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

அவ்வாறு, குறிப்பிடப்பட்ட விவசாய விளைப் பொருட்களுக்கான பட்டியலில், பாக்கு பயிர் இடம் பெறவில்லை. மேலும், பாக்கு உணவுப் பயிர்களின் வரிசையில் வராததாலும், உணவுப் பயிரான நெல் மட்டும் பொது விநியோக திட்டத்துக்கு, பயன்பாட்டுக்கு வருவதால், தானியமாக நெல் மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழக அரசு பரிசீலனை செய்தால் மட்டுமே, பாக்கு கொள்முதல் மையம் அமைக்க முடியும். அவ்வாறு, கூட்டுறவு அல்லது வேளாண் சார்ந்த பாக்கு கொள்முதல் மையம் அமைத்தால், அரசுக்கு கணிசமான வருவாயும், விவசாயிகளுன் பயன்பெறுவர்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நீர்நிலைகளை பாதுகாப்பதில் பொதுப்பணித்துறை அதிகாரிகள்...அலட்சியம் அணை, கண்மாய்களை ஆக்கிரமித்து விவசாயம் செய்யும் அவலம்

பழநி: இந்தாண்டு கடும் வறட்சி காரணமாக, பழநி வட்டார அணைகள், குளங்கள், கண்மாய்களில் நீர்வரத்து இன்றி வறண்டுள்ள நிலையில், ஆக்கிரமிப்பு விவசாயம் அதிகரித்துள்ளது. இதனால் நீர்நிலைகள் பகுதி சுருங்கி வருகிறது. இதை கண்டுகொள்ளாமல் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உள்ளனர். பழநி வட்டாரத்தில் அணைகள், குளங்கள், கண்மாய்களில் தண்ணீர் இன்றி நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துவருகிறது. அணைகள் கட்டப்பட்டதன் நோக்கமே விவசாயத்திற்கு பயன்படவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் தற்போது அணைகள் குடிநீர்

தேக்கங்களாகவே மாறியுள்ளன. குடிநீர் ஆதராமாக உள்ள பாலாறு பொருந்தலாறு, வரமாநதி அணைகளில் குறைந்தளவே தண்ணீர் உள்ளதால், வறண்ட பகுதிகளில் ஆக்கிரமித்து விவசாயம் செய்வது அதிகரித்துள்ளது.விவசாயம் என்ற பெயரில் செடிகளுக்கு பூச்சி மருந்து அடிப்பது முதல் அனைத்து பணிகளும் நடக்கிறது. இந்த மருந்துகள் தண்ணீரில் கலந்து குடிநீராக பயன்படுத்தும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.இதை பொதுப்பணித்துறையினர் வேடிக்கை பார்த்து மட்டுமே வருகின்றனர். தங்கள் துறைக்கு சொந்தமான பகுதியை பாதுகாப்பது என்பதில் துறையினருக்கு அக்கறையில்லை. இதே நிலை தான் வரதமாநதி அணை பகுதியிலும் உள்ளது. மேலும், இடும்பன் கோயில் குளம், ஆயக்குடி வீரகுளம், மானூர் குளங்கள் உட்பட பல குளங்கள், கண்மாய்களில் நீர்பிடிப்பு பகுதிகளை ஆக்கிரமித்து, வெள்ளரி, கடலை போன்றவற்றை விவசாயம் செய்கின்றனர். இதனால் அணைகள், குளங்களில் உள்ள குறைந்தளவு தண்ணீரும் உறிஞ்சப்படுகிறது. மேலும் கோடை மழை பெய்து தண்ணீர் வரத்து இருந்தால், அது ஆக்கிரமிப்பு விவசாயத்தை பாதிக்கும் என, கண்மாய் மதகுகளை திறந்துவிட்டு நீரை வெளியேற்றுவது, உடைப்பு ஏற்படுத்துவது போன்ற காரியங்களிலும் ஆக்கிரமிப்பாளர்கள் ஈடுபடுகின்றனர்.குடிநீர் தேவைக்கே தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள நிலையில், அணைகள், குளங்கள்நீர்பிடிப்பு பகுதிகளில் ஆக்கிரமிப்பு விவசாயம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, அரசு உத்திரவிடவேண்டும்.

## மகாராஷ்டிரா திராட்சை வரத்து அதிகரிப்பால் விலை பெரும் சரிவு

சேலம்: மகாராஷ்டிரா சீட்லஸ் திராட்சை பழங்கள் வரத்து அதிகரிப்பு காரணமாக, விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.
தமிழகம் முழுவதும் தேனி, திண்டுக்கல் பகுதியில் இருந்து திராட்சை பழங்கள் விற்பனைக்கு அதிகம் வரும். தற்போது, தேனி திராட்சை பழங்களின் வரத்து குறைந்து விட்டது. பன்னீர் திராட்சை பழங்கள், கருப்பு திராட்சை பழங்கள் மட்டுமே, தேனி பகுதியில் இருந்து வரத்தாகிறது. தேனி பழங்கள் வரத்து குறைந்து விட்டாலும், மகாராஷ்டிரா மாநிலத்தில், பல்வேறு இடங்களில் விளைந்துள்ள பச்சை சீட்லஸ் திராட்சை பழங்கள், சேலம் நகருக்கு அதிகளவு வரத்தாகி வருகிறது. தள்ளு வண்டிகளில், ஒரு கிலோ பச்சை சீட்லஸ், 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கருப்பு சீட்லஸ் திராட்சை பழங்கள் ஒரு கிலோ, 80 ரூபாய், கருப்பு திராட்சை ஒரு கிலோ, 20 ரூபாய், பன்னீர் திராட்சை ஒரு கிலோ, 30 ரூபாய் என விற்பனையாகிறது. சேலம் நகருக்கு தினமும், 30 டன் திராட்சை பழங்கள் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வரத்தாகிறது.

## குளறுபடி!"அன்னவாரி' திட்ட பயிர் கணக்கீட்டில்... குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்

நாமக்கல்: "வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில், சேதமடைந்த பயிர்கள் அன்னவாரி திட்டத்தின் கீழ் கணக்கிட்டப்பட்டுள்ளது. அவ்வாறு கணக்கிடப்பட்டதில், ஏராளமான குளறுபடி நடந்துள்ளது. அதனால், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை கிடைக்காது' என, நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், குற்றச்சாட்டு எழுப்பட்டது.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், நேற்று நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:

நந்தகோபாலன் (சௌதாபுரம்): குமாரபாளையம், பள்ளிபாளையம் பகுதியில், காவிரி ஆற்றில், நேரடியாக சாயக்கழிவு நீர் கலந்து விடப்படுகிறது. அதனால், நிலத்தடி நீர் முற்றிலுமாக மாசடைந்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும், மாசடைந்த நிலையிலேயே வெளியேற்றப்படுகிறது. பள்ளிபாளையம் சுற்றுவட்டாரத்தில், கடும் வறட்சி நிலவுவதால், அங்கு தென்னை, பனை மரம் கருகியுள்ளது. அவற்றுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கலெக்டர்: புகார் மனு அளித்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பழனிசாமி (திருச்செங்கோடு): திருச்செங்கோடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில், குடிநீர் சரிவர சப்ளை செய்யப்படுவதில்லை. சொந்த உபயோகத்திற்கு வண்டி மூலம் தண்ணீர் எடுத்து வந்தாலும், விற்பனை செய்வதாக கூறி, வாகனங்களை பறிமுதல் செய்கின்றனர்.

கலெக்டர்: தண்ணீர் விற்பனை செய்வது குற்றச்செயலாகும். புகார் குறித்து மனு அளித்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பெருமாள் (தமிழக விவசாயிகள் சங்கம்): கெயில் நிறுவனம் குழாய்களை பதிக்க, முதல்வர் தடைவிதித்துள்ளார். நாமக்கல் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் கெயில் நிறுவனத்தினர், விளை நிலங்களில் குழாய் பதிக்க பள்ளம் தோண்டியும், குழாய்களையும் போட்டும் வைத்துள்ளனர். அவற்றை, அந்நிறுவனம் மூலம் அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கலெக்டர்: தமிழக சட்டசபையில், தமிழக முதல்வர் இப்பிரச்னை சம்மந்தமாக பேசியுள்ளார். விவசாயிகள் புகார் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சந்திரசேகர் (கல்குறிச்சி): வறட்சி பாதிக்கப்பட்ட பகுதியில், அன்னவாரி திட்டத்தின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. அங்கு சேதமடைந்த பயிர்களும் கணக்கிடப்பட்டுள்ளது. அதில், குறிப்பாக, ராசிபுரம் தாலுகாவில் அனைத்து பயிர்களும் சேதமடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், மாவட்டத்தில் உள்ள பிற தாலுகாவான, நாமக்கல், திருச்செங்கோடு, ப.வேலூர் பகுதியில், சேதமடைந்த பயிர்கள் சரிவர குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக, சேந்தமங்கலத்தில் மரவள்ளி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதை குறிப்பிடாமல், நிலக்கடலை, சோளம் என

குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குளறுபடியால், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி கிடைக்காது.

கலெக்டர்: இந்த புகார் குறித்து மனுவாக அளித்தால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடந்தது.

விவசாயிகள் அவதி

நாமக்கல் மாவட்ட கலெக்டராக ஜகந்நாதன் பொறுப்பேற்ற பின் நடக்கும் விவசாயிகள் குறைதீர் கூட்டங்களில், அனுபவம் வாய்ந்த விவசாயிகள் சிலரை, கூட்டத்தில் பேச அனுமதித்து வருகிறார். வழக்கமாக, ஓரிரு விவசாயிகள் மட்டும் பேச அனுமதிக்கப்படுவர்.

ஆனால், நேற்றைய விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், எட்டுக்கும் மேற்பட்ட விவசாயிகள், காலை, 10 மணிக்கு துவங்கி மதியம், 1 மணி வரை, தங்கள் அனுபவங்களை தெரிவித்தனர். புகார் தெரிவிக்க குறுகிய நேரமே வழங்கப்பட்டதால், பலர், தங்களது புகார் குறித்து நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்க இயலாமல் அவதிக்குள்ளாௌகினர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.03.2013 A.M**

---

## விவசாய பெண் தொழிலாளர்களின் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்

நாகை, : நாகை மாவட்ட காங்கிரஸ் விவசாய பிரிவு தலைவர் ராமலிங்கம், தமிழக அரசுக்கு விடுத்துள்ள கோரிக்கையில் கூறியிருப்பதாவது:

பருவமழை பொய்த்ததாலும், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு போதுமான தண்ணீர் திறந்து விடாததாலும் டெல்டா விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கி வருகிறது. இருப்பினும் விவசாய தொழிலாளர்கள் விவசாயம் பொய்த்ததால் வேலைவாய்ப்பின்றி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். டெல்டா மாவட்டத்திற்குட்பட்ட கூலி வேலை செய்யும் பெண்கள் மகளிர் சுயஉதவிக்குழு மூலமாக பெற்ற வங்கிக் கடனை திரும்ப செலுத்த முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே தமிழக அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டத்திற்குட்பட்ட மகளிர் சுயஉதவிக்குழுவின் வங்கிக்கடன்களை வறட்சி நிவாரணமாக கருதி வங்கிக்கடன்களை தள்ளுபடி செய்யவும், முன்கடன்களை வசூலிப்பதில் கெடுபிடியை தவிர்க்கவும் நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அறிவித்து உதவ வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விலை போகாமல் அறுவடை கடலை தேக்கம் அரசு நேரடி கொள்முதல் செய்யுமா

மன்னார்குடி, : திருவாரூர் மாவட்டத்தில் அறுவடை செய்த கடலைகள் விலை போகாமல் தேக்கமடைந்துள்ளன. கடலையை அரசு நேரடி கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம், மன்னார்குடி ஒன்றிய பகுதிகளில் எடமேலையூர், மூவாநல்லூர், காரிக்கோட்டை, மேலவாசல், பேரையூர் கருவாக்குறிச்சி, வடுவூர் பரவாக்காட்டை, உள்ளிக்கோட்டை, நெடுவாக்கோட்டை மற்றும் அதை சார்ந்த பகுதிகளில் கடந்த ஆடிபட்டத்தில் 5,000 ஏக்கரில் கடலை சாகுபடி செய்யப்பட்டது. அவை தற்போது கடலை அறுவடை செய்யப்பட்டுள்ளது. பல இடங்களில் கடலை அறுவடை நடைபெற்று வருகிறது.

இவற்றை  கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகள் 40 கிலோ மூட்டை ஒன்றுக்கு ரூ. 1400 என கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டு ரூ.2,500, அதற்கு முந்தைய ஆண்டுகளில் ரூ.3400 என கடலை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு கடலை கொள்முதல் மிகவும் குறைந்த விலையில் எடுக்கப்படுகிறது.

ஆடிப்பட்டத்தின்போது விதை கடலை மூட்டை ரூ.4 ஆயிரம் என விலை உயர்ந்துள்ளது. உரவிலை அதிகரித்துள்ளது. தண்ணீர் தட்டுப்பாடு, மின்வெட்டு மற்றும்   தொழிலாளர்களின் கூலி உயர்வு போன்ற காரணிகளால் கடலை விளைச்சல் குறைந்துள்ள அதே சமயத்தில் உற்பத்தி செலவிற்கேற்ற கொள்முதல் விலையை வியாபாரிகள் நிர்ணயிக்காமல் ரூ.1400 என்ற அளவில் விலை நிர்ணயம் செய்துள்ளனர். இதனால் விவசாயிகள் நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்து தங்கள் வீடுகளிலேயே கடலையை தேக்கி வைத்துள்ளனர். எனவே தமிழக அரசு வேளாண்மை விற்பனை துறை மூலம் கடலை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து காரிக்கோட்டை விவசாயி மருதமுத்து, வள்ளி ஆகியோர் கூறுகையில், கடந்த ஆண்டு 2,500 விலை நிர்ணயம் செய்து வியாபாரிகள் கடலை கொள்முதல் செய்தனர். இந்தாண்டு ரூ.1,400க்கு விலை கொடுக்க முடியாது என கூறுகின்றனர். இதனால் பல வீடுகளில் கடலை அறுவடை செய்து மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ளது. அடிக்கடி காய வைத்து பராமரிப்பது சிரமம். இப்படியே கட்டி கிடந்தால் எண்ணெய் இறங்கி உழைப்பு முழுவதும் வீணாகி விடும்.

கொள்முதல் செய்யும் காலம் முடிவடைந்தவுடன் விலையை அதிகமாக வைத்து விற்பனை செய்கின்றனர்.

எனவே உற்பத்தி செலவை கணக்கிட்டு, அதற்கு ஏற்ற அளவில் விலை நிர்ணயம் செய்து கடலையை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் அல்லது அரசு பருத்தி கொள்முதலில் வேளாண்மை விற்பனை துறை விலை நிர்ணயம் செய்து கொடுப்பதை போல வியாபாரிகளின் தன்னிச்சையான போக்கை கட்டுப்படுத்த வேண்டும் என்றனர்.

விவசாயி ராஜேந்திரன் கூறுகையில், கடந்தாண்டு மழை பெய்யாமல் வறட்சி, ஆற்றில் தண்ணீர் இல்லை. தொடர்ந்து மின்வெட்டு காரணமாக மின் மோட்டார்களும் இயங்கவில்லை. இதனால் உற்பத்தியை குறைத்தும், நடப்பட்ட கடலை வயல்களில் ஒரு பகுதியை தண்ணீரின்றி காயவிட்டதாலும் , உற்பத்தி இழப்பாலும் பாதித்துள்ளோம்.

இந்த நிலையில் வியாபாரிகளும் கடலைக்கு சரியான விலை நிர்ணயம் செய்ய வில்லை. இதனால்

ஒருவித அச்சம் நிலவுகிறது.

எனவே வேளாண்மை விற்பனை துறை அதிகாரிகளை கொண்டு விலை நிர்ணயம் செய்து உற்பத்தி ஏற்ற விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இதற்கு கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றார்.

**ஒடிசாவில் இருந்து 2,587 டன் உரம் தஞ்சை வருகை**



தஞ்சை : ஒடிசா மாநிலத்தில் இருந்து சரக்கு ரயிலில் 42 வேகன்களில் 2,587 டன் டிஏபி உரம் தஞ்சை வந்தது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்காக ஒடிசா மாநிலத்தில் இருந்து உரங்கள் கொண்டு வரப்படுகின்றன. அம்மாநிலம் பாரதீப் பகுதியில் இருந்து சரக்கு ரயிலில் 42 வேகன்கள் மூலம் நேற்று தஞ்சைக்கு இப்கோ உர நிறுவனத்தின் 2,587 டன் டிஏபி உர மூட்டைகள் வந்தது.

தஞ்சை நிலையத்தில், வேகன்களில் இருந்து உர மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இன்றைய வேளாண் செய்திகள்

28.03.2013 A.M

---

## கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்கக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விழுப்புரம்,

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்கக்கோரி விவசாயிகள் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

### விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு கரும்பு விவசாயி கள் சங்கத்தின் சார்பில் விழுப்புரம் ரெயில் நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப் பாட்டத்திற்கு மாநில பொதுச் செயலாளர் ரவீந்திரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு டன் கரும்புக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என்றும், வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும் என்றும், முத்தரப்பு பேச்சு வார்த்தை கூட்டத்தினை உடனடியாக நடத்திட வேண் டும் எனறும், வறட்சியால் காய்ந்த கரும்பிற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி பேசி னார்கள்.

### கலந்து கொண்டவர்கள்

இதில் மாநில தலைவர் பழனிச்சாமி, முன்னாள் மாநில பொதுச் செயலாளர் ஏழுமலை, பொருளாளர் சின்னப்பா, ஈரோடு மாவட்ட அனைத்து விவசாயிகள் கூட்ட மைப்பு தலைவர் காசியண் ணன், மாநில செயலாளர்கள் காமராஜ், சீனிவாசன், வி.ராதா கிருஷ்ணன், விழுப் புரம் மாவட்ட தலைவர் ஏ.வி.ஸ்டா லின்மணி உள்பட தமிழகம் முழுவதும் உள்ள பொதுத்துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகிகள் கலந்து கொண்ட னர். முடிவில் முண்டியம் பாக்கம் ஆலை சங்க தலைவர் சிவ ராமன் நன்றி கூறினார்.